**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 04/2021**

**2024**ம் வருடம் நவம்பர் திங்கள் 20ம் நாள் வாதிகள் தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர**;** : திருமதி. வாசுகி (PW1) கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

முதல் விசாரணை தொடர்ச்சி:–

1. எனது தாயார் பாலமிர்தத்தின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. எனது தகப்பனார் பசுபதியின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

3. எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. எனது தகப்பனார் பெயரில் தாவா சொத்துக்களில் 1 முதல் 8, 10 முதல் 15 இலக்க சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட பட்டா எண்.1022ன் கணிணி நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

5. தாவா 17வது இலக்க சொத்தைப் பொறுத்து எனது தாயாரின் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.348ன் கணிணி நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. தாவா 17ம் இலக்க சொத்து எனது தாயாரின் பெயருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதற்கு வழங்கப்பட்ட நமுனா வா.சா.ஆ.6 ஆகும்.

7. 17ம் இலக்க சொத்தை எனது தாயாரிடம் ஒப்படைத்ததற்கான வட்டாச்சியரின் உத்தரவாணை வா.சா.ஆ.7 ஆகும்.

8. 17ம் இலக்க சொத்தைப்பொறுத்து எனது தாயார் பெயருக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராய பட்டா வா.சா.ஆ.8 ஆகும்.

9. 18ம் இலக்க சொத்தைப் பொறுத்து எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.757ன் கணிணி நகல் வா.சா.ஆ.9 ஆகும்.

10. 1 முதல் 15 இலக்க சொத்துக்களைப் பொறுத்து எனது பெயரிலும், எனது தம்பிகளான 1, 2 பிரதிவாதிகள் பெயரிலும் ஏற்பட்ட பட்டா எண்.10175ன் கணிணி நகல் வா.சா.ஆ.10 ஆகும்.

11. 7, 8 இலக்க சொத்துக்களை எனது தாயார் முனியசாமி சேர்வை என்பவரிடமிருந்து 13.06.1978ம் தேதியன்று கிரையம் பெற்ற கிரைய ஆவண

எண்.566/1978 ன் அசல் வா.சா.ஆ.11 ஆகும்.

12. நான் 2ம் பிரதிவாதி மீது மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் 28.11.2020ம் தேதியன்று அளித்த புகார் மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.12 ஆகும்.

13. மேற்படி புகார் மனுவிற்கு 30.11.2020ம் தேதியன்று வழங்கப்பட்ட புகார் ஏற்பு மனு ரசீது எண்.113/2020 ன் சார்வு நகல் வா.சா.ஆ.13 ஆகும்.

14. கடந்த 06.02.2023ம் தேதியன்று நான் பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.14 ஆகும்.

15. மேற்படி புகார் மனுவிற்கு 06.02.2023ம் தேதியன்று வழங்கப்பட்ட புகார் ஏற்பு மனு ரசீது எண்.16/2023 ன் சார்வு நகல் வா.சா.ஆ.15 ஆகும்.

16. தாவா சொத்தை இந்நீதிமன்ற ஆணையர் திரு.கோட்டைஈஸ்வரன் அவர்கள் பார்வையிட்டு தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும்.

17. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த மாதிரி வரைபடங்கள் நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.